Baby food

* 473 *Q.*—Sri A. VEDARATHNAM :
Sri V. K. KOTHANDARAMAN :
Sri P. G. MANICKAM : } கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குழந்தைகள் உணவு சம்பந்தமான தொழிற்சாலே, நீலகிரியில் ஏற்படுத்துவது இப்போது எந்நிலேயில் இருக்கிறது ?

(ஆ) இத்திட்டத்திற்காகும் மொத்த செலவு எவ்வளவு ?

(இ) இதில் வெளி உதவி என்ன கிடைக்கிறது ?

(ஈ) இத் தொழிற்சாலேயில் உற்பத்தியாகும் உணவு எத்தகையது ?

(உ) ஆண்டுதோறும் உற்பத்தியின் அளவு எவ்வளவு ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) The proposals for establishment of a baby food factory in Ootacamund are only in the exploratory stage.

(ஆ) *to* (உ) It is too early to furnish these details.

Sri A. VEDARATHNAM : நம் மாநில அரசாங்கமே இந்தத் தொழிலே ஆரம்பிக்க இருக்கிறதா ? அல்லது மத்திய அரசாங்க உதவியோ அல்லது வெளி நாட்டு உதவியோ இதற்கு ஏதேனும் உண்டா ? அப்படியானல் தயவுசெய்து அதன் விவரங்களே அறிவிக்க முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அதெல்லாம்தான் இப்பொழுது பரிசீலனேயில் இருக்கின்றன.

Sri P. G. MANICKAM : குழந்தைகளுக்கான உணவு என்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கான உணவு என்றுல் எந்தெந்தவிதமான உணவுப் பொருள்கள் இந்த தொழிற்சாலேயில் உற்பத்தி செய்யப்படும்.

The Hon. Sri R. VENKATARAMAN : க்ளாக்ஸோ, டூமேக்ஸ், ஆஸ்டர்மில்க் போன்றவைகள் குழந்தைகள் உணவு.

Sri J. MATHA GOWDER : குழந்தைகள் உணவு உற்பத்தி சாலேக்கு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 19 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக காணப்படுகிறது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட முதல் ஆண்டிலேயே அதைத் துரிதமாக ஏற்படுத்த சர்க்கார் பரிசிலனே செய்யுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அதுதான் பரிசீலனேயில் இருக்கிறது என்று சொன்னேன்.